**OS NO. 133/2016**

**06.03.2020**

**வா. சா 1 திரு. நரசிம்மநாயுடு, த/பெ. க்ஷேம்மநாயுடு, வயது 55, ஸ்ரீராமபுரம்.**

**சாட்சி பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை**

ஸ்ரீராமகுப்பத்தில் எனக்கு நிலம் எதுவும் இல்லை. என் அண்ணன் பெயர் கோவிந்தன். நானும் என் அண்ணனும் தனித்தனியாக இருக்கிறோம். தாவா சொத்திற்கும் என் ஊரான ஸ்ரீராமகுப்பத்திற்கும் இடையே அரை கிலோமீட்டர் தூரம் இருக்கும். தாவா சொத்து சம்பந்தமாக வில்லங்க சான்று பெற்று தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கு சம்பந்தமான கிரைய ஒப்பந்தம் போடுவதற்கு முன்பாக தாவா சொத்து யாருக்கு சொந்தம், யார் மூலம் கிடைத்தது என்பது சம்பந்தமாக என் வழக்கறிஞர் திரு. பாலசுப்பிரமணியம் என்பவரிடம் நான் கருத்து கேட்டேன். கருத்துரை கேட்பதற்காக முப்பது ஆண்டுக்குண்டான வில்லங்க சான்றை எடுத்து நான் வழக்கறிஞரிடம் கொடுத்தேன். நான் முப்பது ஆண்டுகள் வில்லங்க சான்று பெற்றேன் என்பதற்குண்டான ஆவணம் தாக்கல் செய்ய முடியும். 1975ம் ஆண்டிற்கு பின்னிட்டு 2014ம் ஆண்டு வரை நான் வில்லங்க சான்று வாங்கியிருக்கிறேன். சாட்சி தற்போது தான் பெற்ற வில்லங்க சான்றை வழக்கறிஞரிடம் கொடுக்கவில்லை என்கிறார். வில்லங்க சான்று பெற்று பத்திர எழுத்தரிடம் கொடுத்தால் அவர் ஆவணம் எழுதிக் கொடுப்பார் என்று என் வழக்கறிஞர் கூறினார். பத்திர எழுத்தர் சொத்தில் எந்த பிரச்சினையும் இல்லை என்றும், கிரைய ஒப்பந்தம் போடலாம் என்றும் என்னிடம் கூறினார். நான் பெற்ற 1975 முதல் 2014 ஆண்டிற்கு உண்டான வில்லங்க சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். எனக்கும் என் அண்ணனுக்கும் எங்கள் கிராமம் மற்றும் சுற்று கிராம வட்டத்தில் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்கிறோம் என்றால் சரியல்ல. என் மீது ஊத்துக்கோட்டை காவல் நிலையம்

மற்றும் காவல் கண்காணிப்பு அலுவலகத்தில் எந்த புகாரும் இல்லை. நாகலாபுரம் மண்டலம் காரணி கிராமத்தைச் சேர்ந்த நாகைய்யா (எ) தாராட்சி மனைவி அலமேலு அம்மாள் என்மீது திருவள்ளூர் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னடையது இல்லை. (வாதி தரப்பு வழக்கறிஞர் இந்த கேள்வியை கேட்க ஆட்சேபனை தெரிவிக்கிறார்.) மேற்படி நபர் புகார் கொடுத்து 06.04.2018ல் நான் எழுதிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நானும் என் அண்ணனும் விவசாயத்திற்கு வட்டிக்கு பணம் கொடுத்து அதற்கு ஈடாக இவ்வாறான கிரைய ஒப்பந்தம் எழுதி வாங்கும் பழக்கம் உண்டு என்றால் சரியல்ல. ஊத்துக்கோட்டை கிராமத்தில் உள்ள முனுசாமி ரெட்டி மகன் பாலைய்யா என்பவரை எனக்கு தெரியும். மேற்படி பாலைய்யா காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் என்மீது புகார் கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பாலைய்யா என்பவரிடம் இருந்து நான் சொத்து வாங்கியிருக்கிறேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக தாவா சொத்திற்கு உண்டான பட்டா யார் பெயரில் உள்ளது என்று நான் கிராம நிர்வாக அலுவலரிடம் கேட்டேன். தாவா சொத்திற்கு உண்டான பட்டா நகல் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. ஜெயச்சந்திரனின் தகப்பனார் முனிரத்தினம் பெயரில் பட்டா இருந்தது. கிரைய ஒப்பந்தம் ரூ.12 லட்சத்திற்கு போடப்பட்டது. ரூ. 10 லட்சம் நான் முன்பணமாக கொடுத்தேன். கிரைய ஒப்பந்தம் போடும்போது ஜெயசங்கர் தான் பயிர் வைத்தார். தாவா சொத்திற்கு உண்டான பட்டா நம்பர் எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையொப்பம் போட்ட முனுசாமி என்பவர் ஊத்துக்கோட்டையைச் சேர்ந்தவர் மற்றொரு சாட்சி பாஸ்கர் பாலுரெட்டிகண்டிகையைச் சேர்ந்தவர். நான் வாங்கும் அனைத்து பத்திரங்களிலும் மேற்படி இரண்டு நபர்கள் தான் எனக்கு சாட்சி கையெழுத்து போடுவார்கள் என்றால் சாட்சி அப்படியில்லை என்கிறார். கிரைய ஒப்பந்தம் போடுவதற்கு முன்பாக தாவா சொத்திற்கு உண்டான மதிப்பு என்ன என்பது சம்பந்தமாக சார்பதிவாளர் அலுவலகத்தில் மதிப்பு பார்த்தேன். சொத்திற்கு

உண்டான மதிப்புச் சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சாட்சி தாக்கல் செய்துள்ளதாக கூறுகிறார். கிரைய ஒப்பந்தம் போடுவதற்கு முன்பாக தாவா சொத்து சம்பந்தமாக வில்லங்க சான்றோ, மதிப்பு சான்றோ பெற்று நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. எந்த ஆவணத்தையும் நான் பார்க்காமல் பிரதிவாதிகளிடம் நான் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளுக்கு கடன் தான் கொடுத்தேன் என்றும், அதுவும் ரூ.9 லட்சம் மட்டுமே கொடுத்தேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டு இருந்தால் ஒப்பந்தம் போடுவதற்கு முன்பாக அனைத்து நடவடிக்கைகளும் எடுத்திருப்பேன் என்றும், கடனுக்காக தான் தாவா கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. முனிரத்தினம் நாயுடுவிற்கு சொத்து எப்படி கிடைத்தது என்பது பற்றி நான் விசாரித்தேன். முனிரத்தினம் நாயுடுவின் பூர்வீக சொத்து என்று சொன்னார்கள். தன்னுடைய சொத்தினை தன்னுடைய பிள்ளை ஜெய்சங்கருக்கு எழுதிக் கொடுத்ததாகவும் முனிரத்தினம் நாயுடு சொன்னார். முனிரத்தினம் நாயுடுவும் உடனிருந்து தான் செய்தார். முனிரத்தினம் நாயுடுவின் பூர்வீக சொத்து என்று அவரே என்னிடம் சொன்னார். முனிரத்தினம் நாயுடுவின் பூர்வீக சொத்து தாவா சொத்து என்பதற்கு நான் ஆவணம் எதுவும் பார்க்கவில்லை. முனிரத்தினம் நாயுடுவுக்கு இரண்டு தம்பிகள் இருக்கிறார்கள். முனிரத்தினம் நாயுடுவோடு பிறந்தவர்கள் அவரோடு சேர்த்து மூன்று பேர். ஒரு சகோதரி. முனிரத்தினம் நாயுடுவுக்கும் அவரது சகோதரர்களுக்கும் இடையே பாகப்பிரிவினை ஆகிவிட்டதா என்று நான் கேட்கவில்லை. தாவா சொத்து முனிரத்தினம் நாயுடுவின் பூர்வீக சொத்து என்பதை நான் ஈஸ்வரநாயுடு, ஆனந்தநாயுடு மற்றும் பக்கத்தில் இருக்கும் சீனிவாசநாயுடு ஆகியோரை விசாரித்தேன். மேற்சொன்ன மூன்று நபர்களும் உயிரோடு இருக்கிறார்கள். முனிரத்தினம் நாயுடுவின் சகோதரர்களிடம் நான் ஒப்பந்தம் போடுவது சம்பந்தமாக ஆட்சேபனை உள்ளதாக என்று நான் கேட்கவில்லை. 2014ம் ஆண்டில் ரூ.10 லட்சம் என்பது பெரிய தொகை என்றால் ஆமாம். முனிரத்தினம் நாயுடுவின் சகோதரர்களை நான் கேட்காததற்கு காரணம்

முனிரத்தினம் நாயுடு பெரியவர் என்பதால் அவர் சொன்னாலே போதும் என்பதால் கேட்கவில்லை என்று கூறுகிறார். முனிரத்தினம் நாயுடு இந்த வழக்கில் என்ன எதிர் வழக்குரை தாக்கல் செய்திருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி என்ன ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரமும் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் என்ன கட்சி எடுத்துள்ளார்கள் என்று நான் வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்துக் கொள்ளவில்லை. பிரதிவாதிகளுக்கு நான் பணம் கடனாக தான் கொடுத்தேன் என்றும், அதற்கு ஈடாக தான் கிரைய ஒப்பந்தத்தை எழுதி வாங்கினேன் என்றும், பிரதிவாதிகளுக்கு சொத்தினை விற்கும் எண்ணம் இல்லை என்றும், எனக்கும் சொத்தினை வாங்கும் எண்ணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி முனிரத்தினம் நாயுடு 2ம் பிரதிவாதி பெயரில் எந்த தேதி, மாதம், ஆண்டில் என்ன பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்று என்னால் சொல்ல முடியாது. முனிரத்தினம் நாயுடு ஜெய்சங்கருக்கு எழுதிக் கொடுத்த பத்திரத்தில் அவருக்கு சொத்து எப்படி கிடைத்து என்று எழுதியுள்ள விவரத்தை எனக்கு படித்துக் காண்பித்தார்கள். முனிரத்தினம் நாயுடு அவருக்கு சொத்து எப்படி கிடைத்தது என்று பத்திரத்தில் சொல்லவில்லை. சாட்சி தானாக ஜெய்சங்கர் முனிரத்தினம் நாயுடுவுக்கு ஜீவனாம்சம் கொடுப்பதாக ஒப்புக் கொண்டுள்ளார் என்றும், அதற்காக கிரைய ஒப்பந்தம் எழுதும்போது ஜெய்சங்கர், முனிரத்தினம் நாயுடுவுக்கு பணத்தை கொடுத்தார் என்றும் கூறுகிறார். ஜெய்சங்கர் முனிரத்தினம் நாயுடுவுக்கு ரூ.1 லட்சம் பணம் கொடுத்தார். இந்த விவரம் தாவா கிரைய ஒப்பந்தத்தில் சொல்லப்படவில்லை. கிரைய ஒப்பந்தம் போடப்பட்ட தேதியில் என்னிடம் ரூ.12 லட்சம் இல்லை. ரூ.10 லட்சம் என்னிடம் இருந்தது. கிரைய ஒப்பந்தம் பதிவு செய்வதற்கு உண்டான கட்டணத்தை நான் தான் கொடுத்தேன். பத்திரம் பதிவு செய்ய பத்திர செலவோடு ரூ.15,000/- செலவானது. முத்திரைத்தாள் ரூ.100/-க்கு வாங்கப்பட்டது. ரூ.10,000/- பணம் செலுத்தினேன். பத்திரம் தட்டச்சு செய்வதற்கு ரூ.3,000/- நான் தான் கொடுத்தேன். ரூ.15,000/- எனக்கு எப்படி கிடைத்தது என்றால் சாட்சி ரூ.10 லட்சம் தவிர்த்து மேற்படி பணத்தை தன்

கைவசம் இருந்ததாக கூறுகிறார். ரூ. 4,15,000/-நான் ரொக்கமாக வைத்திருந்தேன். ரூ.6,00,000/- ஊத்துக்கோட்டை வங்கியில் என் பெயரில் மூன்று லட்சமும், என் மனைவி பெயரில் மூன்று லட்சமும் வைத்திருந்தேன். வங்கியில் உள்ள பணத்தை ஜெய்சங்கர் வங்கி கணக்கிற்கு மாற்றம் செய்தேன். இந்த விவரம் கிரைய ஒப்பந்தத்தில் எழுதப்படவில்லை. ஜெய்சங்கருக்கு ரூ.8 லட்சம் மட்டுமே பணம் கொடுத்தேன் என்றும். ரூ.10 லட்சம் என்று கட்டாயப்படுத்தி கிரைய ஒப்பந்தத்தில் எழுதி வாங்கிக் கொண்டேன் என்றால் சரியல்ல. நான் 2010ம் ஆண்டில் இருந்து வருமான வரி செலுத்துகிறேன். ரூ. 10 லட்சம் கொடுத்தது சம்பந்தமாக வருமானவரிக் கணக்கில் நான் காட்டியுள்ளேனா என்றால் சாட்சி கிரைய பத்திரத்தை பதிவு செய்யும்போது கணக்கில் காட்டவேண்டும் என்று என் ஆடிட்டர் சொன்னதாக கூறுகிறார். ஆரணியில் உள்ள சரவணன் என்பவர் தான் என்னுடைய ஆடிட்டர். மேற்படி விவரம் சம்பந்தமாக என் ஆடிட்டர் சாட்சியம் அளிப்பார். ரூ.2 லட்சம் பணத்திற்காக இரண்டு ஆண்டுகள் அவகாசம் போட்டு எழுத வேண்டிய அவசியம் என்ன என்று கேட்டால் சாட்சி தான் மூன்று மாதம் மட்டுமே கேட்டதாகவும், பிரதிவாதிகள் கரும்பை வெட்டிவிட்டு எழுதிக் கொள்ளலாம் என்று அவர்களாகவே எழுதிக் கொண்டதாக கூறுகிறார். மூன்று மாத அவகாசம் என்று எழுதினால் தான் நான் கையெழுத்து போடுவேன் என்று சொல்லவில்லை. என் பிராதிலும் சாட்சியத்திலும் நான் மூன்று மாதங்கள் போடுங்கள் என்று கேட்ட விவரத்தையும், பிரதிவாதிகள் கரும்பு வெட்டிவிட்டு கிரையம் கொடுப்பதாக சொல்லி இரண்டாண்டுகள் அவர்களாகவே போட்டார்கள் என்ற விவரத்தையும் சொல்லியிருக்கிறேன். மேற்சொன்ன விவரத்தை நான் பிராதிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. கரும்பு வெட்டி முடிக்க இரண்டாண்டு ஆகும் என்ற விவரம் கிரைய ஒப்பந்தத்தில் எழுதவில்லை. இரண்டாண்டுகள் கழித்து கரும்பு வெட்டி எடுத்தார்கள் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்ய முடியும் என்றால் சாட்சி இல்லை என்று கூறுகிறார்.

(வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).